Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 04

பாடம்: தமிழ் மொழி - Tamil

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியர் திரு. R.யசந்தன்
கே/உந்துகொட தமிழ் மகா வித்தியாலயம்

## கிருட்டிணன் தூதுச் சருக்கம்

❖ **அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. ‘செய்வரால் இனம் உகளும் திருநாடு’ இங்கு செய் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. சேறு  II. நெல்  III. வயல்  IV. குளம்

2. ‘விரைவில் உருத்து எழுந்து பொரநினைவோ’ இங்கு உருத்து என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. ஒற்றுமை  II. உடன்பாடு  III. அமைதி  IV. சினந்து

3. ‘விரைவில் உருத்து எழுந்து பொரநினைவோ’ இங்கு பொரல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. பொறுமை  II. போர் செய்தல்  III. சலித்தல்  IV. சூழ்ச்சி செய்தல்

4. ‘உயர்வரைக்காடு என்ன……’ இங்கு வரை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. மலை  II. கரும்பு  III. சோளம்  IV. மூங்கில்

5. ‘செயிர் அமரில் வெகுளி’ இங்கு செயிர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. கொடிய  II. அமைதியான  III. விரைவான  IV. மெதுவான

6. ‘செயிர் அமரில் வெகுளி’ இங்கு அமர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. சமாதானம்  II. போர்  III. ஒற்றுமை  IV. அச்சம்

7. ‘இரு திறத்தேமும் சென்று மாள்வோம்’ இங்கு மாள்வோம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. வாழ்வோம்  II. நடிப்போம்  III. இழப்போம்  IV. இறப்போம்

8. ‘கயிரவமும் தாமரையும் கமழ் பழனக்….’ இங்கு பழனம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. காடு  II. வயல்  III. வீடு  IV. நாடு

9. ‘கயிரவமும் தாமரையும் கமழ் பழனக்….’ இங்கு கயிரவம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. ஆம்பல்  II. முல்லை  III. முளரி  IV. அல்லி

10. ‘அரவுயர்த்தோனுடன் மறு சூது…..’ இங்கு அரவு என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
   I. வீரம்  II. சத்தம்  III. பெரிய  IV. பாம்பு

❖ **சுருக்க விடை தருக.**

1. “ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது என்று அருள் புரிந்தான் அமரர்கோமான்”
   I. ‘ஐவராம்’ எனக் குறிக்கப்படுபவர்கள் யாவர்?
   II. ‘அமரர் கோமான்’ என்பதன் பொருள் யாது? அது யாரைக் குறிக்கிறது?

2. “உயிர் அனையாய் சந்து பட உரைத்தருள் என்றான் அறத்தின் உருவம் போல்வான்”
   I. ‘உயிர் அனையாய்’ என்பதன் பொருள் யாது?
   II. ‘அறத்தின் உருவம் போல்வான்’ என்று யாரைக் குறிப்பிடுகின்றார்?